O.S.No. : 01/2016

Dated : 25.11.2025

**வா.சா.1 : குமார் ; த/பெ. லிங்கன்**

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது தகப்பனார் 2004-ஆம் ஆண்டு ஆவண எண். 474/2004-ல் பெற்ற கிரையத்தின் அடிப்படையில்தான் எனக்கு செட்டில்மென்ட் பத்திரத்தை ஆவண எண். 604/2013-ல் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில் நான் கடந்த 03.09.2014 -ல் உதகமண்டலம் நகராட்சிக்கு கட்டிடம் கட்ட அனுமதி கோரி விண்ணப்பம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் எனது பெயரில் உள்ள ஆவணத்தை சரியான முறையில் உதகமண்டலம் நகராட்சிக்கு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான்.

2. அதன்படி 12.12.2014 அன்று நகரமன்ற தீர்மானம் 386-ன் படி எனக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். அதன்படி நகராட்சி ஆணையரின் செயல்முறைகள் எனக்கு 06.11.2015 அன்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகு எனது தகப்பனார் 28.01.2016 அன்று உதகை நகராட்சி ஆணையருக்கு செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டதாகவும், எனக்கு வழங்கப்பட்ட கட்டிட உரிமத்தை ரத்து செய்ய கோரியும், செட்டில்மென்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டதற்கான ஆவண நகல் மற்றும் சிட்டா உடன் மனு அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. அவ்வாறு செட்டில்மென்ட் ஆவணம் 01.04.2015 அன்று ஆவண எண். 493/2015 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் மீண்டும் 01.06.2016-ல் எனக்கு வழங்கப்பட்ட கட்டிட உரிம எண். 241/15/F-1 -ஐ ரத்து செய்யக் கோரி மனு அனுப்பியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எனது தகப்பனார் அனுப்பிய மனுவின் பெயரில் உதகமண்டலம் நகராட்சி விசாரணை செய்ததில் நான் 2015-

ஆம் ஆண்டு செட்டில்மென்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டதை மறைத்து கட்டிடம் உரிமம் கோரி விண்ணப்பம் செய்துள்ளது தெரியவந்ததால் எனக்கு வழங்கப்பட்ட கட்டிட உரிமத்தை உதகமண்டலம் நகராட்சி ரத்து செய்து அதுகுறித்து எனக்கு 14.06.2016 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. மேற்படி 14.06.2016 தேதியிட்ட அறிவிப்பானது 18.07.2016 தேதியில் எனக்கும் எனது தகப்பனாருக்கும் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு எந்த அறிவிப்பையும் பெறவில்லை. நான் அந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்டு தற்போது பெறவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கம் எனது குடும்பத்தினருக்கும் உள்ள பிரச்சினையில் தேவையில்லாமல் உதகமண்டலம் நகராட்சியை வழக்கில் தரப்பினராக சேர்த்து அலைக்கழித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2025.11.25 20:17:43 +0530